***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 99/2019 – P.W. 3 (LW8)***

| | |
|---|---|
| *Name* | தினேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *63* |

*1, 2 வது* **எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் சென்னை K8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 15.11.2018 ம் தேதியன்று 18.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது முல்லை நகர் கோல்டன் அப்பாட்ர்ட்மெண்டை சேர்ந்த கல்யாணசுந்தரம் மகன் வீரசேகரன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.632/2018 ச/பி. 379 இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி **முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றையதினமே 19.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் கோகுல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளேன். (**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

***4.*** சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததும் எதிரிகளை தேடியபோது எதிரிகள் இருவரும் 01.12.2018 ம் தேதியன்று 11.00 மணிக்கு மன்னார்குடி ருக்மணிக்குளம் அருகே மதுக்கூர் ரோட்டில் நின்றுகொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து அவர்களிடம் இருந்து எவ்வித அச்சுறுத்தலும், தூண்டுதலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஸ்ரீதர் மற்றும் நடராஜன் முன்னிலையில் பதிவு செய்தேன். மேலும் எதிரிகளிடம் இருந்து 12.15 மணிக்கு மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் முன்பக்கம் பின்பக்கம் பதிவு எண் பலகை இல்லாத கருப்பு கலர் pulzar 150 என்ற வாகனமானது கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டது. **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகளை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன்.

கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயப்பொருட்களை சி.பி.135/2018 ஆக நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஒப்படைத்தேன். (**படிவம் 91 அ.சா.ஆ- 7 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

மேற்படி வழக்கின் சாட்சிகளை விசாரித்ததில் இரண்டு எதிரிகளும் பொதுநோக்கத்தோடு இந்த குற்ற செயலில் ஈடுப்பட்டுள்ளதாக தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இதச ல் இருந்து 379 r/w 34 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இத்துடன் எனது விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 379 r/w 34 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 30.12.2018 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

10.11.2018 ம் தேதியன்று வண்டியை காணபோனதாக தங்களிடம் தகவல் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது 15.11.2018 ம தேதி என்றால் சரிதான். இந்த 5 நாட்கள் கால தாமத்திற்கு எதுவும் குறிப்பிட்ட காரணங்கள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதியறிக்கையில்

15.11.2018 ம் தேதி வண்டி காணாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ருக்மணி குளம் கரை பகுதியில் குறிப்பாக எந்த பகுதியில் நின்று அசா.1 ஐ விசாரித்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசா.1 மற்றும் அசா.2 நண்பர்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அசா.2 ஐ விசாரித்தபோது அசா.2 அந்த இடத்தில் எவ்வளவு நேரமாக நின்றுகொண்டிருந்தார் என்றோ, எவ்வளவு நேரமாக நின்று கொண்டருந்தார் என்றோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

விசாரணையில் pulsar வண்டி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் வண்டியின் மாடல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் தடயபொருள் சோதனை செய்யப்படவில்லை என்றும், யாரிடம் இருந்து தடயப்பொருள் கைப்பற்றப்படவிலலை என்றால் சரியல்ல. புகார்தாரர் Quality center Inspector என்பதால் இந்த எதிரிகளை சம்பந்தபடுத்தி அவர்களுக்கு எதிராகவும், எதிரியிடம் இருந்து எவ்வித தடயப்பொருளும் கைப்பற்றாத நிலையில் எதிரிகள்மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் தங்கள் காவல் நிலையத்திலே தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.